සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)**

காலம் 03 மணித்தியாலங்கள

**அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) (15)**

විභාග අංකය
Index No / சுட்டெண்
.........................................

- **ஐந்து (5) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

---

1. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் அபிவிருத்தி நிர்வாகத்தின் கீழ், பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்தியே பிரதானமான கருத்தில்கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியானது பெரும்பாலும் அரசியல் அபிவிருத்தியினை சார்ந்ததாக இருக்கும் அதேவேளை மற்றும் அரசியல் அபிவிருத்தியின் உள்ளார்ந்த பண்புகள் அபிவிருத்தி நிர்வாகத்துடன் தொடர்புடையதாகும். இவ் விடயங்களை இலங்கையை மையமாக வைத்து விளக்கவும். (20 புள்ளிகள்)

2. அபிவிருத்தி நிர்வாகத்தின் உந்துசக்தியாக (Thrust) நிலையான (Stable) மற்றும் ஒழுங்கான (Orderly) மாறுதல்கள் மூலம் முகாமைத்துவப் புரட்சிக்கு (Management Revolution) உட்படுதலை, தற்போதைய அரச அதிகாரத்துவத்தில் (Bureaucracy) அடையாளம் காண முடிகின்றது. இந்த மாற்றங்கள் இலங்கையின் அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்கவும். (20 புள்ளிகள்)

3. கடந்த காலங்களில் இலங்கையின் புகையிரத சேவை மற்றும் வினைத்திறனான சேவையின் அவசியம் குறித்து பல்வேறு சமூக மட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. இலங்கை நிர்வாக சேவை அலுவலர் என்ற ரீதியில், இலங்கை புகையிரத திணைக்களம்/சேவை மறுசீரமைப்பு மற்றும் சீர்திருத்த பொறிமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை பகுப்பாய்வு ரீதியாக முன்வைக்குக. (20 புள்ளிகள்)

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளை விளக்கவும்

4.1. இலங்கையில் அரச சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதன் (Digitization) மூலம் அபிவிருத்தி நிர்வாக செயல்முறையை நெறிப்படுத்துதல் (10 புள்ளிகள்)

4.2. இலங்கையில் மக்கள் மையப்படுத்திய அபிவிருத்தி செயல்முறை தொடர்பான அபிவிருத்தி நிர்வாகம் (10 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் - 20)

5. பிரதேச அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி தேவைகளை அடையாளம் காண இளைஞர் சமுதாயம் மற்றும் சமூக ஆர்வலர்களை வினைத்திறனான முறையில் ஈடுபடுத்துவது தொடர்பாக அரசின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கு இணையான கட்டமைப்பாக ஜனசபா அமைப்பை அமுல்படுத்த அரசினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி நிர்வாக செயல்முறையில் இந்த பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் மற்றும் ஏற்படக்கூடிய சவால்கள் பற்றியும் கருத்தரைக்குக. (20 புள்ளிகள்)

6. 13 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டின் அபிவிருத்தி நிர்வாகத் துறை மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் சவால்கள் பற்றி கலந்துரையாடவும். (20 புள்ளிகள்)

**************